பக்கங்கள்:-16

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 16 | செவ்வாய்க்கிழமை | 03.10.2023 | அதிர்வு 63

## முல்லைத்தீவில் பொலிஸ் அலுவலர் சடலமாக மீட்பு!

முல்லைத்தீவில் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். முல்லைத்தீவு தலைமைப் 07

எங்கள் கைகள் இணையட்டும்! அடிமை விலங்குகள் உடையட்டும்!!

### பேரினவாத அடக்குமுறைகளுக்கு எதிராக

# யாழில் நாளை மாபெரும் மனித சங்கிலிப் போராட்டம்

### தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டாக அழைப்பு

“அன்புக்குரிய எம் தமிழ் பேசும் மக்களே! பேரினவாத அடக்குமுறைகளுக்கு எதிராக மாபெரும் மனித சங்கிலிப் போராட்டம் நாளை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. இந்த மனித சங்கிலிப் போராட்டம் மருதனார்மடத்தில் காலை 9 மணியளவில் ஆரம்பித்து யாழ். நகர் வரையில் முன்னெடுக்கப்படவுள்ளது. எனவே, இந்தப் போராட்டத்தில் மாபெரும் மனிதச் சங்கிலியாகக் கைகோர்த்து, நீதி கோரிட திரண்டு வாருங்கள் என உங்கள் அனைவரையும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளாகிய நாம் உரிமையுடன் அழைக்கின்றோம்.” 02



# நீதியே இல்லாத இந்த ஆட்சியில் நல்லிணக்கம் எப்படிச் சாத்தியம்?

### சந்திரிகா அம்மையார் கேள்விக்கணை

- சுடர் திலீபன் -

“இந்த ஆட்சியில் நீதியை எதிர்பார்க்க முடியாது என்பதற்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியின் பதவி விலகல் விவகாரம் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. இப்படியான ஆட்சியில் நல்லிணக்கம் எப்படிச் சாத்தியமாகும்.?

- இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐ.நா. வரை சென்று நல்லிணக்கம் பற்றிப் பேசுகின்றார். ஆனால், இங்கு நீதிபதி ஒருவர் அழுத்தங்கள் மற்றும் உயிர் அச்சுறுத்தலால் பணிபுரிய முடியாது என்று 02



## சமகால விடயங்கள் தொடர்பில் சஜித்துடன் பேசிய அமெ. தூதர்

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி ஜே.சங்குக்கும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் ஐக்கிய அமெரிக்கா தூதரகத்தின் அரசியல் விவகார அதிகாரி மேத்யூ 07






நீதிமன்றச் செயற்பாடுகளை ஒட்டி நேற்று முன்தினமும் அதற்கு முதல் நாளும் நான் எழுதிய பத்தி தொடர்பாக ஒரு சமூக ஊடகம் எழுப்பிய கேள்வியையும், அதற்கு ஸ்ரீதரன் சிவஞானம் எம்.பி. வழங்கிய பதிலையும் நேற்றிரவு காணொலியில் பார்த்தேன். எனக்கு அது சிரிப்பை வரவழைத்தது.

“வால்மீகி இராமாயணத்தை எழுத விநாயகர் கொம்பு முறித்துக் கொடுத்தார்.” 03

# என்னதான் நடக்கின்றது இங்கு?

## ஒன்றுமே புரியவில்லையாம் மைத்திரிக்கு அரசு சரியான பதில் வழங்க வேண்டுமாம்



- சுடர் திலீபன் -

**“இலங்கையில் இப்போது என்னதான் நடக்கின்றது? எனக்கு ஒன்றுமே புரியவில்லை. முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ஏன் பதவி விலகினார்? அவர் ஏன் நாட்டைவிட்டு வெளியேறினார்? இந்தக் கேள்விகளுக்கு அரசு சரியான பதில்களை வழங்க வேண்டும்.”**

**- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

அவர் மேலும் கூறுகையில்,

“இலங்கை ஜனநாயக நாடு என்று வாய்ச்சொல்லில் மாத்திரமே கூற வேண்டிய நிலையில் நாம் இருக்கின்றோம். ஏனெனில், இங்கு எல்லாம் தலைகீழாகவே நடக்கின்றன.

இங்கு மத வழிபாடுகளிலும் அரசியல் தலையீடு. நீதித்துறையிலும் அரசியல் தலையீடு. நாடாளுமன்றச் சிறப்புரிமையைப் பயன்படுத்தி சிலர் தான்தோன்றித்தனமாக அரசியல் நடத்துகின்றனர். இது நாட்டின் எதிர்காலச் செயற்பாடுகளில் பாரிய தாக்கத்தைச் செலுத்தும்.

பதவி விலகிய முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பக்கச்சார்பு இல்லாத சுயாதீன விசாரணை நடத்தி உண்மை நிலையை நாட்டு மக்களுக்கு அரசு தெரிவிக்க வேண்டும்.” – என்றார்.

## யாழில் நாளை...

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிம் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), தமிழ் மக்கள் கூட்டணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகிய தமிழ்த் தேசியப் பரப்பில் செயற்படும் அரசியல் கட்சிகள் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளன.

அந்தக் கட்சிகள் நேற்று வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாது:-

“எமது சொந்த மண்ணில், முல்லைத்தீவு மாவட்டத்தில், குருந்தூர்மலையில் அமைந்திருக்கும் வரலாற்றுத் தொன்மை மிக்க இந்து ஆலயத்தின் சிதைவுகளையும் சிதிலங்களையும் தொல்பொருள் ஆய்வு என்ற போர்வையில், பழைய பௌத்த விகாரை ஒன்றின் மிச்ச மிகுதிகளாகவும், எச்ச சொச்சங்களாகவும் உரிமை பாராட்டி, அங்கே பௌத்த விகாரை ஒன்றை கட்டியெழுப்ப பௌத்த சிங்களப் பேரினவாதிகள் முன்னெடுத்து வந்திருக்கும் முயற்சிகளை நீங்கள் அறிவீர்கள்.

பேரினவாதிகளின் ஆக்கிரமிப்புக்கும் அடாவடித்தனத்துக்கும் எதிராக, எமது மக்கள் தரப்பில் காட்டப்பட்ட எதிர்ப்பினால் முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், புதிய கட்டுமானங்கள் எதுவும் நிறுவப்படக்கூடாது என்று நீதிமன்று வழங்கிய கட்டளையை மீறி, அவசரம் அவசரமாக புதிய விகாரை ஒன்று, அதிகாரத் தரப்பின் ஆதரவோடு கட்டப்பட்டு, முற்றுப்பெறும் நிலையில் எழுந்து நிற்கின்றது.

இந்தச் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராக, தமிழ் மக்கள் தரப்பில் முன்வைக்கப்பட்ட முறையீடுகளின் பேரில், அவற்றை நிறுத்த முயன்ற மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவை அடிபணிய வைக்க முயன்று, முடியாமல் போன இனவாத சக்திகள், நீதிபதிக்கு எதிராக நாடாளுமன்றத்தின் உள்ளும் புறமும் துவேசக் கண்டனங்களையும் கீழ்த்தரமான விமர்சனங்களையும் வெளியிட்டு பிரச்சாரப் போர் ஒன்றை தொடுத்து வந்திருந்தன.

இந்தச் சூழ்நிலையின் உச்சக்கட்டமாக, அதிகார மட்டத்தில் இருந்து அழுத்தங்களும் அச்சுறுத்தல்களும் நேரடியாகவும் மறைமுகமாகவும் நீதிபதி மீது பிரயோகிக்கப்பட்டன.

இந்தக் கேவலமான நடவடிக்கைகளுக்கு மனோ ரீதியாகத் தொடர்ந்தும் தாக்குப் பிடித்து நிற்க முடியாத நிலையில், நீதிபதி சில தினங்களுக்கு முன்னர் தனது பதவியைத் துறந்து, நாட்டை விட்டே வெளியேறிச் சென்றுள்ளார்.

இத்தனைக்கும் அவர் செய்த ஒரே தவறு, வளைந்து கொடுக்காமல், அடிபணியாமல் துணிச்சலோடும் நேர்மையோடும் தனது கடமையை சட்டத்தின் வழி நின்று செய்ததே ஆகும்.

ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்களின் இருப்புக்கும், உரிமைக்கும், வாழ்வுக்கும் துணை நின்றே அவர் இந்த நிலைமைக்கு ஆளாகியுள்ளார்.

இது மிகப் பாரதூரமான நிலைமை! துன்பத்தில் துவளும் எமது மக்களின் கடைசி நம்பிக்கையாக ஓரளவுக்கேனும் இருந்து வந்திருக்கும் நீதித்துறைக்கே சவால் விடுக்கப்படும் அபாயகரமான நிலைமை!!

இதனை நாம் எல்லோரும் கைகட்டிப் பார்த்திருக்க முடியாது. எவ்விதத்திலும் அனுமதிக்க முடியாது.

இந்தச் சூழ்நிலையில், இலங்கைத் தீவில் தமிழ் பேசும் மக்களின் இருப்பும், அடிப்படை உரிமைகளும் தொடர்ந்தும் குறிவைத்துத் தாக்கப்படுவதை உலகத்தின் கவனத்திற்கு மீண்டும் தீவிரமாக நாம் கொண்டு செல்ல வேண்டும்.

இலங்கை அரசின் பேரினவாத அரசியல் சித்தாந்தமும், நிகழ்ச்சி நிரலும் எம் மீது அராஜக அடக்குமுறைகளாக மீண்டும் மீண்டும் பாய்வதை, உலகின் கண்களுக்கு முன் நாம் வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டும்.

செய்யக்கூடாததை எல்லாம், எண்ணிக்கையில் சிறுபான்மையினராக வாழும் தமிழ் பேசும் மக்களுக்குச் செய்து கொண்டு, நாகரிக நடத்தை கொண்ட நல்ல பிள்ளையாக வெளியுலகுக்கு முன் நாடகமாடும் இலங்கை அரசின் வஞ்சகத் தந்திரங்களையும், பொய்கள் நிறைந்த பிரசாரத்தையும் நாம் அம்பலப்படுத்த வேண்டும்.

ஆகவே, ஓரணி திரண்டு, நேர்வழி நின்று நீதி கோரி நாம் எழுப்பும் உரிமைக் குரல்கள் ஆக்ரோசத்துடன் ஆர்ப்பரித்து எழவேண்டும்.

எனவேதான், தொடர்ந்து கொண்டிருக்கும் பேரினவாத ஆக்கிரமிப்புக்களுக்கும் அடக்குமுறைகளுக்கும் அராஜகத்துக்கும் எதிரான எமது மக்களின் எதிர்ப்பியக்கத்தின் முதற்கட்டமாக நாளை 4ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணியளவில் மருதனார்மடத்தில் ஆரம்பித்து யாழ். நகர் வரையில், காங்கேசன்துறை வீதி வழியாக, மாபெரும் மனிதச் சங்கிலியாக கைகோர்த்து, நீதி கோரிட திரண்டு வாருங்கள் என உங்கள் அனைவரையும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளாகிய நாம் உரிமையுடன் அழைக்கின்றோம்.

மேலும், எம் மக்கள் மத்தியில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் மனித உரிமை அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் உட்பட மாணவர் அமைப்புக்கள், மகளிர் உரிமை நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள், வணிகர் கழகங்கள், சிவில் சமூக நிறுவனங்கள் மற்றும் மத ஸ்தாபனங்கள் உட்படப் பல்துறை சார்ந்த செயற்பாட்டு இயக்கங்களின் ஆதரவையும் பங்களிப்பையும் இந்த மனித சங்கிலிப் போராட்டத்தில் நாம் நாடி நிற்கின்றோம்.

எங்கள் கைகள் இணையட்டும்! அடிமை விலங்குகள் உடையட்டும்!!” – என்றுள்ளது.

## நீதியே இல்லாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தெரிவித்துவிட்டு பதவி விலகியுள்ளார். இறுதியில் அவர் நாட்டை விட்டும் வெளியேறியுள்ளார்.

பதவி விலகிய நீதிபதி தெரிவித்த விடயங்களுக்கு அரச உயர்பீடம் உடனே மறுப்புக் கருத்துக்களைத் தெரிவிக்காமல் உண்மையில் என்ன நடந்தது என்பது தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும்.

நீதிபதி ஒருவரே பதவி விலகி உயிரைக் காப்பாற்ற நாட்டைவிட்டு ஓடுகின்றார் எனில் சாதாரண பொதுமக்களின் நிலை என்ன? ஜனாதிபதி இந்த விடயத்தில் அதிக கரிசனை செலுத்த வேண்டும்.” – என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என நாடாளுமன்றத்திலேயே கேள்விச் செவியர் போல சில வாரங்களுக்கு முன்னர் கதை அவிழ்த்துவிட்ட ஸ்ரீதரன் எம்.பி. என்னுடைய இரண்டு நாள் பத்தியையும் கூட ஊன்றி வாசிக்காமல் கேள்விச் செவியர் போலவே பதில் அளித்து இருக்கின்றார் என்பது தெளிவானது.

விடயத்துக்குள் இறங்க முன்னர் அந்த சமூக ஊடகப் பதிவின் ஒரு பகுதியை நோக்குவோமா?

***கேள்வி:-*** *ஊடகவியலாளர் வித்தியாதரன் ஒரு விடயத்தை எழுதியிருக்கின்றார். விடுதலைப் புலிகளும் நீதிபதிகளைக் கட்டுப்படுத்தினார்கள் என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தக் கூடிய பத்தி ஒன்றை எழுதி இருக்கின்றாரே....?*

***பதில்:-*** *இன்று காலையில் நான் அதைப் படித்தேன். வித்தியாதரனுக்குப் பதில் சொல்ல இப்போது விடுதலைப் புலிகள் இல்லை. விடுதலைப் புலிகள் இருந்தால்தான் அவர் கதைத்தவை என்று கூறியவை சரியா? தூயவன் உண்மையில் தீவகத்துக்கு இராணுவத் தளபதியாக இருந்தாரா? தூயவன் அரசியல் துறையில் இருந்தவரா? அரசியல் துறையில் இருந்தவராயின் இவர் எப்படிப் போய் அந்த இராணுவத்தை சந்தித்தார்? இவர்களுக்கும் அவருக்குமான ஊடாட்டம் என்ன? இந்த விடயங்களில் அவர் எழுதியதை மட்டும்தானே நாம் பார்க்கலாம்...?*

*தலைவர் பத்திரிகையாளர் மாநாடு நடத்துகின்ற போது சில பேரை தலைவர் அந்த மாநாட்டில் சந்திக்கவில்லை. அதை நான் பெயர் சொல்ல விரும்பவில்லை. ஏன் சந்திக்கவில்லை என்பதையும் வரலாறு பதிவு செய்து கொள்ளும். தனியாகச் சந்தித்து தலைவர் சாப்பாடு கொடுக்க, நான் சாப்பிட்டேன் என்று கூறுகின்ற பத்திரிகையாளர்களும் இருக்கின்றார்கள். உண்மையில் அந்த விடயங்கள் எனக்குத் தெரியாது. நான் அந்த விடயங்களில் – ஊடாட்டங்களில் – ஈடுபடவில்லை. அவருக்கும் அவர்களுக்கும் இருந்த உறவு அவருக்கு மட்டும்தான் தெரியும். அல்லது அவர்களில் இருந்த விடுதலைப் புலிகள் யாராவதுதான் சொல்ல வேண்டும்.*

*நான் நினைக்கிறேன் தூயவனும் எங்கோ ஒரு வெளிநாட்டில்தான் இருக்கிறார். அப்படி இருந்தால் அவர்தான் பதிலளிக்க வேண்டும். இதற்குப் பதில் சொல்வதற்கு எனக்குத் தெரியாது.*

***கேள்வி:-*** *இந்த நேரத்தில் அரசினால் ஒரு நீதிபதி பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளான சமயத்தில்.....?*

***பதில்:-*** *காலையில் நான் அதை படிக்கின்ற போதே நினைத்தேன். இது ஒரு சமப்படுத்தும் நடவடிக்கை போன்றது அல்லது விடுதலைப் புலிகள் நீதித்துறையை இயங்க விடவில்லை, அதை முடக்கி வைத்திருந்தார்கள் என்று காட்டுவது போல் அமைந்தது......!*

– இப்படிச் செல்கின்றது அந்த கேள்வி – பதில் பேட்டி.

என் விளக்கத்தை விலாவாரியாகக் குறிப்பிட்டால்தான் கேள்வி கேட்டவரினதும் பதில் கூறியவரினதும் புரிதலை வாசகர்கள் எடை போட முடியும்.

1. விடுதலைப் புலிகள் நீதிபதிகளை மிரட்டினார்கள் என்று நான் கூறவில்லை. அவர்கள் தமது கட்டுப்பாட்டில் இருந்து இராணுவத்தின் வசம் வீழ்ந்த யாழ் குடாநாட்டில் ஸ்ரீலங்கா அரசின் சிவில் நிர்வாகத்தை முடக்கும் நடவடிக்கைகளை எடுத்தார்கள். நீதிமன்றங்கள் சிவில் நிர்வாகத்தின் ஒரு பகுதி என்பதால் அவையும் முடக்கப்பட்டன. சிவில் நிர்வாகக் கட்டமைப்புகளை முடக்குகையில் அதன் ஓர் அங்கமான நீதிமன்றங்களை முடக்குவது மக்களைப் பாதிப்படையச் செய்யும் என்பது புலிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டதால், அதன் மீதான முடக்கத்தை புலிகள் நீக்கி – அவை ஸ்ரீலங்கா அரசின் சட்டங்களை நிலைநிறுத்தும் நீதிமன்றங்களாக இருந்த போதும் – அவை சுயாதீனமாக, சுதந்திரமாக இயங்க வழி செய்து, தலையீடின்றி அதற்கு அனுமதி தந்தார்கள். நீதித்துறையின் சுதந்திரத்தில் அவர்கள் தலையிட தாராள வாய்ப்பு இருந்தும், அதில் தலையிடாமல் அது சுதந்திரமாக செயல்பட அனுமதித்தார்கள் என்பதைத் தான் குறிப்பிட்டேன். எனது பத்தியின் இரண்டுஅங்கங்களையும்ஊன்றிவாசித்து இருந்தால் கேள்வி கேட்டவருக்கும், நுனிப்புல் மேய்ந்த நிலையில் பதில் அளித்தவருக்கும் அது நன்கு புரிந்து இருக்கும். இந்தக் கேள்வி பதிலே வந்திருக்காது. நுனிப்புல் மேயும் வாசிப்பு இவ்விடயத்தையும் இராமாயணத்தை எழுத கொம்பு முறித்துக் கொடுத்தார் விநாயகர் என்ற கவனிப்பாக்கி – கணிப்பாக்கி – விட்டது.

2. இந்த விடயத்தில் பதில் சொல்லப் புலிகள் வரத் தேவையில்லை. அந்த நேரத்தில் வெளியான 'உதயன்' பத்திரிகைகளின் பிரதிகளை எடுத்துப் பார்த்தால் சிவில் நிர்வாக முடக்கம் தொடர்பான புலிகளின் அறிவிப்புக்கள், அதையொட்டி நடந்த சிவில் நிர்வாக முடக்கங்கள், நீதிபதிகள் யாழ் வந்து பதவி ஏற்ற அன்றே நீதிமன்றங்களைக் கூட்டாமல் கொழும்பு திரும்பியமை, சிவில் நிர்வாக முடக்கம் பற்றிய புலிகளின் அறிவிப்புகள் மற்றும் செய்திகளை அவ்வப்போது பிரசுரித்தமைக்காக பத்திரிகை ஆசிரியராக இருந்த நான் பலாலிக்கு பல தடவைகள் அழைக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டமை போன்ற விடயங்கள் தொடர்பான செய்திகளை திகதி வாரியாக ஸ்ரீதரன் எம்.பி. பார்க்க முடியும். 'எனக்குத் தெரியாது, ஆகவே அப்படி நடந்திருக்காது' என்ற சாரப்பட ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் இத்தகைய விடயங்களை விட்டேத்தியாக விமர்சிக்க முயல்வது பெரும் அபத்தம்.

சில சமயங்களில் என்னை போல ஸ்ரீதரன் எம்.பியும் அந்தச் செய்திகளின் பழைய பிரதிகளைப் பார்ப்பதற்கு அந்த ஊடக நிறுவனத்திற்கு போகின்றவர் இல்லையாயின், யாழ் மாநகர சபை நூலகத்திலோ, யாழ் பல்கலைக்கழக நூலகத்திலோ அல்லது கொழும்பில் சுவடிகள் திணைக்களத்தின் நூலகத்திலோ அப்பிரதிகளை அவர் தேடிப் பார்வையிட்டு ஐயத்தை தெளிவிக்க முடியும். இது விடயத்தில் கணக்குப்பிள்ளையாகிய நாங்கள் பேச – எழுத தேவையில்லை, கணக்குப் புத்தகமான பழைய பத்திரிகை இதழ்களே சாட்சியமாகப் பேசும். ஆகவே புலிகள் இல்லை என்பதற்காக பழைய வற்றை மறைத்து, நேற்று முளைத்த கொம்பு முந்தி வந்த காதை மறைக்கும் வேலையை ஸ்ரீதரன் எல்லா விடயங்களிலும் செய்ய முற்படக்கூடாது.

3.அந்த இரண்டு நாள் பத்தியிலும் நான் குறிப்பிட்ட விடயங்கள் புதியவை அல்ல. 90 வீதமான விடயங்கள் சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் வெளியான 'என் எழுத்தாயுதம்' என்ற என் அனுபவப்பட்டறிவு நூலில் பிரசுரமானவைதான். சந்தர்ப்ப சூழ்நிலை கருதி அவற்றை நான் இச்சந்தர்ப்பத்தில் மீள நினைவூட்டினேன். அவ்வளவுதான்.

4.அந்த இரண்டு நாள் பத்தியிலும் நான் குறிப்பிட்ட விடயங்களுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்ட இராணுவத் தளபதி ஜெனரல் லயனல் பலகல்ல, ஊடகவியலாளர் ஞா.குகநாதன், நீதிபதி இ.த.விக்னராஜா மற்றும் அந்நேரத்தில் யாழ்ப்பாண நீதிமன்றங்களில் பணியாற்றியபலசட்டத்தரணிகள்போன்றவர்கள்எல்லோரும் இன்னும் உயிருடன் இருக்கின்றனர். பத்து ஆண்டுகளுக்கு முன்னர் எனது புத்தகத்தில் இது பற்றி நான் எழுதிய சமயம் திடகாத்திரமாக இருந்த முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் பலகல்ல இப்போது சுமார் 80 வயதில் தளர்ந்திருப்பார் என நினைக்கிறேன். இவர்கள் எல்லோரும் சாட்சிகள்தான்.

5.நீதிமன்றம்மீள இயங்கத்தொடங்கியமையை ஒட்டி, அச்சமயம் முதல் நீதிபதியாக மீண்டும் செயல்பட தொடங்கிய விக்னராஜா ஒரு பொது நிகழ்வில் என் பங்களிப்பைப் பூடகமாகக் குறிப்பிட்டு உரையாற்றிய விடயங்கள் வரை 'என் எழுத்தாயுதம்' நூலில் இந்த விவகாரம் சம்பந்தமான ஆதாரங்களாகப் பல விடயங்களை நான் முன் வைத்துள்ளேன். பத்தியில் நீண்டு விடும் என்பதால் அவற்றை நான் தரவில்லை. ஸ்ரீதரனுக்கும் அவரிடம் கேள்வி கேட்ட செய்தியாளருக்கும் மேலும் சந்தேகங்கள், விளக்கமின்மை, ஐயங்கள் இருந்தால், யாழ் பொது நூலகத்தில் அல்லது பல்கலைக்கழக நூலகத்தில் அந்த நூலைப் பெற்று, ஒரு தடவை இது பற்றிய அத்தியாயத்தை வாசித்து, ஐயத்தைத் தெளிவுபடுத்திக் கொள்ள பரிந்துரை செய்கிறேன்.

6.தூயவனை அச்சமயத்தில் புலிகளின் யாழ் பொறுப்பாளராகவே நான் குறிப்பிட்டு இருந்தேன். ஊடகங்களைக் கையாள்வதனால் அவர் அரசியல் பொறுப்பாளர்என்பதுபொதுவாகவேவிளங்கியிருக்கும். ஸ்ரீதரன் குறிப்பிடுகின்ற மாதிரி அல்லாமல், அவரும் இப்போது உயிருடன் இல்லை. நீதிமன்றங்களை மீள ஆரம்பிக்கும் இணக்கத்தை நான் அவர் மூலம் தமிழ்செல்வனிடம் பெற்ற பின்னர், சில மாதங்கள் கழித்து, வன்னிக்குச் செல்லும் போது படகு கவிழ்ந்த விபத்து ஒன்றில் 1999 நவம்பர் எட்டாம் திகதி அவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். அதை ஸ்ரீதரன் எம்.பிக்கு ஆதாரப்படுத்துவதற்காக அந்நேரத்தில் வெளியான அஞ்சலி அறிவிப்பு ஒன்றை இத்துடன் இணைத்துள்ளேன்.

யாழ்ப்பாணம் இராணுவத்திடம் விழுந்த பின்னர் 1996 இல் சில காலம்

(4ஆம் பக்கம் பார்க்க..)

# நாட்டில் சமூக ஊடகங்களை நெறிப்படுத்துவது அவசியம்!

## ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



சமூக ஊடகங்கள் தவறாக பயன்படுத்தப்படுவதை கட்டுப்படுத்துவது அவசியமாகும். அதற்காகவே, இணையக் காப்புச் சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது

என்றும் ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

இணையக் காப்புச் சட்டமூலம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சமூக ஊடகங்களை நசுக்குவது முறையானதல்ல. இருப்பினும் எமக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை சமூக ஊடகங்களை தவறாகப் பயன்படுத்துவதாகும். இதனை தவறாக பயன்படுத்துவதன் காரணமாக இளைஞர்களின் உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

குடும்பப் பிணைப்புகளிலிலும் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது. சமூக ஊடகங்களின் ஊடாக மதங்களுக்கும் சிலர் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

எனவே, சமூக ஊடகங்கள் மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்தினால், பிரச்சினைகளை உருவாக்கினால், அல்லது ஆத்திரமூட்டும் செயற்பாடுகளை தோற்றுவித்தால்,அதனை கட்டுப்படுத்த சில கட்டுப்பாடுகள் அவசியமாகும்.

அரசாங்கத்தை தொடர்ச்சியாக விமர்சிக்கலாம். சமூக ஊடகங்கள் மூலம் பாதிக்கப்பட்ட நபருக்கு நீதியை பெற்றுக்கொடுப்பதற்காக இடம் ஒன்று இருக்க வேண்டும். அதற்காகவே இந்தச் சட்டமூலம் கொண்டு வரப்படவுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

---

## இரகசியம் பரகசியம்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி..)


மூதூர் பச்சனூரைச் சேர்ந்த குலதீபன் யாழ் பொறுப்பாளராக இருந்தார். அவருடன் இருந்த ஊடாட்டங்கள் பற்றிய பல முக்கிய விடயங்கள் எனது புத்தகத்தில் பதிவாகியுள்ளன. அவர் தாவடியில் இராணுவச் சுற்றுவளைப்பில் வீரச் சாவடந்தமை வரை பல முக்கிய அம்சங்களைப் பதிந்துள்ளேன்.

அதற்குப் பின்னர் சொற்ப காலம் பரணி என்பவர் யாழ் பொறுப்பாளராக இருந்தார். அதன் பின்பே 1998 ஜனவரியில் தூயவன் யாழ் அரசியல் பொறுப்பாளர் பதவியை ஏற்றார்.

2000ஆம் தசாப்தத்தின் முதல் பகுதியில் புலிகளின் யாழ் பொறுப்பு திரும்பவும் பரணியிடமே ஒப்படைக்கப்பட்டது. அப்போது நடைபெற்ற பல விடயங்களை நான் இன்னும் குறிப்பிடவில்லை. அவற்றைப் பற்றியும் பின்னர் எழுத வேண்டும். அந்தப் பரணி இப்போதும் யாழ்ப்பாணத்தில் உள்ளார். அவருக்கும் இந்த விடயங்கள் தெரிந்திருக்கும் என்று எண்ணுகிறேன்.

7.தலைவர் பிரபாகரன் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் 'உதயன்', 'சுடர் ஒளி' ஆகிய இரு பத்திரிகைகளின் சார்பிலும் நானே இருந்தேன். மாநாடு முடிந்து முக்கிய தலைவர்களுடன் உரையாடிவிட்டே புறப்பட்டேன். மாநாட்டில் நான் கேள்வி எதனையும் ஏன் எழுப்பவில்லை என்று மதியுரைஞர் பாலசிங்கம் பின்னர் என்னிடம் கேட்டமை எனக்கு நினைவு உண்டு. ஸ்ரீதரன் எம்.பியின் கேள்விச் செவிக்கு அந்த மாநாடு குறித்து பிழையான செய்தி ஏதேனும் போயிருக்கும் என்பது அவரின் பதிலில் தொனிக்கிறது. தேவையாயின் அந்த பத்திரிகையாளர் மாநாட்டுப் படங்களைத் தேடி எடுத்து அவருக்கு அனுப்பி வைக்க முடியும்.

8. தலைவர் பிரபாகரனுடன் மாத்திரமல்ல, புலிகளின் ஏனைய தலைவர்களான மாத்தையா, கிட்டு, யோகி, திலீபன், தமிழ்ச்செல்வன், அன்டன் பாலசிங்கம், கருணா, ஜெயம், ராதா என்று இன்னும் பலருடன் மட்டுமல்ல, மாற்று இயக்கத் தலைவர்களான சுந்தரம் ஸ்ரீசபாரத்தினம், பத்மநாபா, பாலகுமார் மற்றும் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், குமார் பொன்னம்பலம் போன்றோருடனும் எனக்கு இருந்த தொடர்பு, ஊடாட்டம், பரிச்சயம் போன்றவை ஊரறிந்த விடயம். தலைவருடன் தனித்து இருந்து சாப்பிட்டேன் என்று படம் காட்ட வேண்டிய தேவை




எனக்கு இல்லை.

8. தலைவர் பிரபாகரன், மதியுரைஞர் பாலசிங்கம் ஆகியோருக்கும், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கும் இடையில் சமரச ஊடாட்டங்களுக்கான செய்தி பரிமாற்றப் பணியாளராக பல சமயங்களில் நான் செயற்பட்டேன் என்பது தென்னிலங்கை சிங்கள, ஆங்கில ஊடகங்கள் வரை அத்துப்படியான விவகாரம். ஏன் ஜனாதிபதிகள் மஹிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க, சந்திரிகா குமாரதுங்க, கோட்டாபய ராஜபக்ஷ போன்றோருக்கும் அது தெரியும். தலைவருடன் சாப்பிடும் படத்தை யாருக்கும் காட்டித்தான் நான் அவரோடு நெருக்கமாக பழகினேன் என்பதை நிரூபிக்க வேண்டிய தேவை எனக்கு இல்லை. நான் சாப்பிடும் படத்தை பார்த்த ஸ்ரீதரனுக்கு அது பற்றிய காழ்ப்புணர்வு இருப்பதை அவரது பேட்டி வெளிப்படுத்துகிறது.

9. மொத்தத்தில் இலங்கை அரசின் நீதிமன்றங்களைக் கூட தமக்குத் தடுத்துக் கட்டுப்படுத்தும் வலிமையும் ஆற்றலும் இருந்தும், அவற்றை இயங்க அனுமதிக்க வேண்டிய தேவை இருந்தது என்பதை உணர்ந்து, அதற்கு அனுமதித்த புலிகளின் உயர்ந்த பண்பியல்பை நான் வெளிப்படுத்த, மேற்படி செவ்வியில் கேள்வி தொடுத்தவரும் பதில் அளித்த ஸ்ரீதரனும் புலிகளின் அந்த நிலைப்பாட்டை கொச்சைப்படுத்தும் விதத்தில் அர்த்தப்படுத்த முயன்றமை பெரும் துரதிஷ்டமே.

10.ஸ்ரீதரன் எம்.பிக்கும், அவரைச் செவ்வி கண்டவருக்கும் நான் மீண்டும் குறிப்பிட விரும்புவது ஒன்றுதான். அன்று யாழ்ப்பாணத்தை இராணுவம் மீளக் கைப்பற்றியமையை பெரும் இராணுவ ஆக்கிரமிப்பாகவே புலிகள் பார்த்தனர். ஆக்கிரமிப்பு இராணுவத்தின் கீழ், ஆக்கிரமிப்பாளர்களின் நீதிமன்றங்கள் இயங்குவதை சிவில் நிர்வாக நடவடிக்கையின் ஒரு பங்காகக் கருதி தொடர்ந்தும் முடக்கும் வாய்ப்பு இருந்தபோதும், நீதித்துறை இயங்க வேண்டும் என்ற தாராளத்தோடு புலிகள் நேர்மையாகச் செயல்பட்டார்கள் என்பதைத்தான் உள்ளார்ந்த விஷயங்களோடு நான் வெளிப்படுத்தினேன்.

அவ்வளவுதான்.

# தனியாக வீட்டில் இருந்த வயோதிப மாதுவின் கழுத்தை வெட்டி 10 பவுண் நகை கொள்ளை

## ஏறாவூர் கொம்மாந்துறையில் நேற்று சம்பவம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொம்மாந்துறை பிரதேசத்தில் உள்ள வீடொன்றினுள் புகுந்த நபர், வீட்டில் தனியாக இருந்த வயோதிப பெண்ணின் கழுத்தை கத்தியால் வெட்டி, அவர் கழுத்தில் அணிந்திருந்த 10 பவுண் நகைகளை கொள்ளையிட்டுச் சென்ற சம்பவம் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்கு இலக்கான பெண் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது :-

கொம்மாந்துறை பகுதியில் தனிமையில் இருந்த 67 வயதான வயோதிபப் பெண்ணின் வீட்டினுள் நேற்றுக் காலை 7.30 மணிக்கு சைக்கிளில் தனியாகச் சென்ற நபர் நுழைந்துள்ளார். வயோதிபப் பெண்ணின் கழுத்தை கத்தியால் வெட்டித் தாக்கியுள்ளார்.

இதனால் படுகாயமடைந்த பெண்ணின் கழுத்தில் இருந்த சுமார் 10 பவுண் நகைகளைக் கொள்ளையடித்துக் கொண்டு தனது சைக்கிளில் தப்பி ஓடியுள்ளார்.

இதனையடுத்து, வயோதிப பெண் சத்தமிட, அங்கு வந்த அயலவர்கள் உடனடியாக பெண்ணை வைத்தியசாலைக்கு



கொண்டுசென்றுள்ளனர். தற்போது அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகிறார் என்பதும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இச்சம்பவத்தால் அந்த பகுதியில் பெரும் பரபரப்பும் அச்சமும் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

அதனை தொடர்ந்து, சம்பவ இடத்துக்கு சென்ற ஏறாவூர் பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார், தடயவியல் பிரிவு பொலிஸார் மோப்ப நாயுடன் சென்று மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# இணையக் காப்புச் சட்டமூல முயற்சி குறித்து ஆசிய இன்டர்நெட் கூட்டமைப்பு அவதானம்!

சம்பந்தப்பட்ட தரப்பினருடன் எவ்வித கலந்துரையாடலையும் மேற்கொள்ளாமல் இலங்கை அரசாங்கம் நிகழ்நிலை (இணையக்) காப்பு சட்டமூலத்தை கொண்டுவருவதற்கு மேற்கொள்ளும் முயற்சி தொடர்பில் தாங்கள் மிக உன்னிப்பாக அவதானித்து வருகிறார்கள் என என ஆசிய இன்டர்நெட் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பு ஆசிய பிராந்தியத்தில் இணையத்தள சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் கூட்டமைப்பாகும்.

உத்தேச சட்டமூலம், இலங்கையர்களின் கருத்துச் சுதந்திரம் மற்றும் எதிர்ப்பைவெளிப்படுத்துவதற்கானசந்தர்ப்பத்தை தடுக்கும் கொடூரமான சட்டமாகும் என அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

“எமது உறுப்பினர்களின் சேவைகளைப் பயன்படுத்துவோரது பாதுகாப்பு தொடர்பில் நாம் மிகுந்த கரிசனை கொண்டுள்ளோம். சட்டங்கள் ஊடாக புத்தாக்கங்கள் மூழ்கடிக்கப்படக் கூடாது.

இந்த துறைசார்ந்த அனைத்து தரப்பினருடனும் இணைந்து செயற்பட்டு நீதியான, சர்வதேசத் தராங்களுக்கு அமைவான மற்றும் இலங்கையின் டிஜிட்டல் பொருளாதார மேம்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்கும் விதிமுறைகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நாம் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். – என்று குறிப்பிடப்பட்டுள்ளது

# இலங்கையுடன் கடன் மீளளிப்புத் தொடர்பில் ஜப்பான், இந்தியா, பிரான்ஸ் கூட்டு ஒப்பந்தம்

## இம்மாத இறுதியில் மொரோக்கோவில் நடக்கும்; சீனாவும் இணங்கினால் அதுவும் சேர்க்கப்படுமாம்

இலங்கையின் பிரதான கடனாளிகளான ஜப்பான், இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் கடனை மறுசீரமைக்கும் நடவடிக்கைகளில் இந்த மாதம் இறுதியில் ஓர் உடன்பாட்டை இலங்கை எட்டக்கூடும் என்று ஜப்பானின் ஞயமெநை செய்தித்தாள் தெரிவித்துள்ளது.

இலங்கை தனது சர்வதேச மற்றும் உள்நாட்டு கடன்களை திருப்பிச் செலுத்துவதை கடந்த ஆண்டு மே மாதம் நிறுத்திய பின்னர், அதன் வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்புச் செய்வது தொடர்பாக ஜப்பான், சீனா மற்றும் இந்தியா உள்ளிட்ட கடன் வழங்குநர்களிடமும் மற்றும் இருதரப்பு கடன் வழங்குநர்களுடனும் இலங்கை பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியது.

அமெரிக்கா, ஜப்பான் மற்றும் இந்தியா உள்ளிட்ட இலங்கையின் முக்கிய கடன் வழங்குநர்கள் குழு, மொரோக்கோவில் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி கூட்டங்களின் போது அந்த நாட்டுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட விரும்புகிறது.

என்றாலும், இந்தக் குழுவில் சேர்வதை சீனா எதிர்க்கிறது.

“சீனாவுடன் அல்லது சீனா இல்லாமல் கடன் வழங்கும் நாடுகளிடையே ஒரு உடன்பாட்டை எட்டுவதை நாங்கள் இலக்காகக் கொண்டுள்ளோம்” என்று ஜப்பானிய நிதி அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் ராய்ட்டர்ஸிடம் கூறியுள்ளார்

“நாங்கள் எங்களால் முடிந்ததைச் செய்வோம், ஆனால், இந்த மாதத்தில் ஓர் ஒப்பந்தம் எட்டப்படுமா என்பதை எங்களால் இன்னும் சொல்ல முடியாது. இந்த மாதம் சர்வதேச நாணய நிதியத்தின் கூட்டங்களில் அதைச் செய்யலாம் என்று நான் தனிப்பட்ட முறையில் நினைக்கிறேன்“ – என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையின் ஒட்டுமொத்த வெளிநாட்டுக் கடனில் 42 வீதத்தை அதன் மிகப் பெரிய ஒற்றைக் கடனாளியான சீனாவும், அதனைத் தொடர்ந்து ஜப்பான் 24 வீதமும், இந்தியா 15 வீதமும், பிரான்ஸ் 4 வீதமும் கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு உயர் நீதிமன்றம் மீண்டும் அழைப்பாணை

தேர்தல் ஆணைக்குழுவின் புதிய தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்களுக்கு மீண்டும் அழைப்பாணை விடுக்க நடவடிக்கை எடுக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய உள்ளிட்ட ஐவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில், நேற்று உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான அடிப்படை உரிமை மனுக்கள், விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் 9 ஆம் திகதி நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட்டதன் மூலம் தங்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டது என தீர்ப்பளிக்கக் கோரி, தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி, மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் மற்றும் 'பவ்ரல்' அமைப்பு ஆகியன இந்த மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

# தடுப்புக் காவலின்போது பணிப்பெண் உயிரிழப்பு; 4 பொலிஸாருக்கும் தொடர்ந்தும் விளக்கமறியல்

வெலிக்கடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த ராஜகுமாரி என்ற பணிப்பெண்ணின் மரணம் தொடர்பில் கைதான 4 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்று கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது, அவர்களை எதிர்வரும் 16 ஆம் திகதிவரை மீள விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுணவல உத்தரவு பிறப்பித்தார்.

தமது வீட்டில் பணிப்பெண்ணாக இருந்த பதுளையைச் சேர்ந்த 41 வயதுடைய ஆர். ராஜகுமாரி என்ற பெண், தமக்குச் சொந்தமான தங்க நகைகளைத் திருடிச் சென்றார் எனக் கூறி, பிரபல தயாரிப்பாளரான சுதர்மா நெத்திகுமார செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் அவர் கடந்த மே மாதம் 11ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

பின்னர் வெலிக்கடை பொலிஸாரால் அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது உயிரிழந்தார்.

எனினும், அவர் தாக்குதலில் உயிரிழந்துள்ளார் என அவரது உறவினர்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தனர்.

இதேவேளை, சட்டவைத்திய அதிகாரி சமர்ப்பித்த பிரேத பரிசோதனை அறிக்கையின்படி, மரணத்திற்கான காரணம் மழுங்கிய ஆயுமொன்றினால் தாக்கப்பட்ட பின்னர் ஏற்பட்ட இரத்தக்கசிவினால் இந்த பெண் உயிரிழந்துள்ளார் என உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இதன்படி, சம்பவம் இடம்பெற்ற போது வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில், கடமையாற்றிய சப் இன்ஸ்பெக்டர் உள்ளிட்ட நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களும் ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

# மின்கட்டணத்தை மீண்டும் அதிகரித்தால் தொழிற்றுறை முழுமையாக வீழ்ச்சியுறும்

## சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை

மின்சாரக் கட்டணத்தை மீண்டும் அதிகரித்தால் நாட்டில் மிகுதியாகவுள்ள சிறு மற்றும் நடுத்தர கைத்தொழிற்றுறை உட்பட ஆடை உற்பத்தி தொழிற்றுறை முழுமையாக வீழ்ச்சியடையும் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அதன்போது சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்தவை வருமாறு:–

மின்கட்டணத்தை அதிகரிக்குமாறு மின்சார சபை கோரிக்கை விடும் போது அதற்கு சாதகமான முறையில் அனுமதி வழங்குவது இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் கடமையல்ல, மின்கட்டண அதிகரிப்பு தொடர்பில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு மின்பாவனையாளர்கள் சார்பில் இருந்து பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

எரிபொருள் விலையேற்றத்தைப் போன்று தற்போது மின்கட்டணமும் முறையற்ற வகையில் அதிகரிக்கப்படுகிறது. மின்கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் மின்சார விநியோக சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா என்பது சந்தேகத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் இந்த ஆண்டு மாத்திரம் மூன்று தடவைகள் மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டது. சடுதியான மின்கட்டண அதிகரிப்பால் மின்பாவனை குறைவடைந்துள்ளதால் தேசிய மட்டத்திலான தொழிற்றுறைகள் பாதிக்கப்பட்டுள்ளன. மின் கட்டண அதிகரிப்பால் பலர் தொழில் வாய்ப்பை இழந்துள்ளார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட நிதியுதவி தாமதமடைந்ததை தொடர்ந்து மீண்டும் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. மின்கட்டணத்தை மீண்டும் அதிகரித்தால் நாட்டில் மிகுதியாகவுள்ள சிறு மற்றும் நடுத்தர கைத்தொழிற்றுறை உட்பட ஆடை



உற்பத்தி தொழிற்றுறை முழுமையாக வீழ்ச்சியடையும்.

நாட்டில் கடந்த மூன்று மாதகாலமாக நிலவியவரட்சியால்நீர்மின்னுற்பத்திபாதிக்கப்பட்டது. எதிர்கால தேவையை கருத்திற்கொண்டு மின்கட்டணத்தை அதிகரிக்க வலியுறுத்தியதாக மின்சார சபை குறிப்பிடுகிறது. மின்பாவனையாளர்கள் மீது சுமையை திணிக்காமல் நிறுவன மட்டத்தில் செலவுகளை குறைத்துக் கொள்ள மின்சார சபை நடைமுறைக்கு சாத்தியமான எந்த நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மாலைதீவு தேர்தல் முடிவு

இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள தீவுக் கூட்ட நாடான மாலைதீவில் நடைபெற்று முடிந்திருக்கின்ற ஜனாதிபதி தேர்தலின் முடிவு இந்தப் பிராந்தியத்தின் அமைதிக்கும் எதிர்கால சமூக நிலைக்கும் ஆபத்துக்கள் நேரலாம் என்ற அச்சத்தைத் தந்திருக்கின்றன.

நேரடியாக இந்திய ஆதரவு ஜனாதிபதிக்கும், சீன ஆதரவு எதிர்க்கட்சிப் பிரமுகருக்கும் இடையிலான மோதலாக வெடித்த இந்தத் தேர்தலில் வெளிப்படையாகவே சீன ஆதரவுப் போக்குக் கொண்ட எதிர்க்கட்சி தலைவர் முஹம்மது மூயிஸ் வெற்றி பெற்றிருக்கின்றார். இந்திய ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்டவராகக் கருதப்படும் ஜனாதிபதி முஹம்மது சோலி தோல்வி அடைந்திருக்கிறார்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டுவிட்டாலும் வரும் நவம்பர் 17ஆம் திகதி வரை - அடுத்த ஒன்றரை மாதங்களுக்கு - சோலியே தற்காலிக ஜனாதிபதிப் பதவியில் தொடர்வார். அதன் பின்னர்தான் வெற்றி பெற்ற முஹம்மது மூயிஸின் பதவிக் காலம் தொடங்கும்.

அடுத்த ஜனாதிபதியைத் தேர்வு செய்வதற்கான தேர்தல் கடந்த 9ஆம் திகதி நடந்தது. சீன - இந்திய ஆதரவு வேட்பாளர்கள் இருவருக்கிடையேதான் நேரடிப் போட்டி அமைந்தது. இதில் எவருமே முதல் சுற்றில் ஐம்பது வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறவில்லை. இதனை அடுத்து இறுதிக் கட்ட வாக்களிப்பு நடந்தது. அதில் 54.6 வீத வாக்குகளைப் பெற்று சீன ஆதரவாளரான மூயிஸ் வெற்றி பெற்றார்.

வெளிப்படையாகவே - பகிரங்கமாகவே - முழு அளவில் சீன ஆதரவுப் போக்கைப் பிரதிபலித்து நிற்பவர் மூயிஸ்.

இதுவரை ஜனாதிபதியாக இருந்து வரும் முகமது சோலி இந்திய ஆதரவாளர். அவரது அரசாங்கம் இந்திய சார்புப் போக்கை வெளிப்படுத்தி வந்தது. இந்திய நலனை முரண்படாத வகையில் பேணி வந்தது.

அவரது ஆட்சியில்மாலைதீவில்இந்தியஇராணுவம் நிலை கொண்டிருப்பதாகவும், அது மாலைதீவின் இறையாண்மைக்கு எதிரானது என்றும் எதிர்க்கட்சி வேட்பாளர் மூயிஸ் தேர்தல் மேடைகளில் பகிரங்கமாகவே குற்றஞ்சாட்டி வந்தார்.

மாலைதீவு தேர்தல் முடிவுகள் இந்தப் பிராந்தியத்தின் - குறிப்பாக இந்தியாவின் - நலனுக்கு உகந்ததாக அமையவில்லை என்பதுதான் அவதானிகளின் கருத்தாக உள்ளது.

இந்தியாவைச் சூழ உள்ள தேசங்களில் - குறிப்பாக சார்க் நாடுகள் மத்தியில் - சீனாவின் செல்வாக்கும் ஆதரவும் வலுவடைந்து வருவது இந்தியாவின் புவியியல் கேந்திர நலன்களுக்குப் பாதகம் ஏற்படுத்தக்கூடிய விடயமாகும்.

ஏற்கனவே இந்தியாவின் தென்முனைத் தீவான இலங்கையில் அம்பாந்தோட்டையில் வலுவாகக் காலூன்றியுள்ள சீனா, அடுத்து மாலைதீவிலும் வலுவாகக் கால் பதிக்கும் அரசியல் சூழ்நிலை தோன்றியிருக்கின்றது என்பதே இந்தத் தேர்தல் சொல்லும் முடிவு.

மாலைதீவு ஆட்சி மாற்றம் இந்தியப் பெருங்கடலில் எதிர்காலத்தில் பல்வேறு முரண்பாடுகள் வலுவடைய வழிவகுக்கும் என்ற சர்வதேச ஆய்வாளர்களின் எச்சரிக்கை புறந்தள்ளத் தக்கதல்ல.

மொத்தத்தில் புதுடில்லிக்கு இது போதாத காலம்தான்..!

## ரயிலுக்காகக் காத்திருந்த வயோதிபர் திடீர் மரணம்

ஹட்டன் ரயில் நிலையத்துக்குள் இருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் செல்வதற்காக ரயில் நிலையத்தில் காத்திருந்த நிலையில் குறித்த நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

70 வயதுடைய மஸ்கெலியாவைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளைஹட்டன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நிதி கிடைக்கக் கூடாது என்பதே எதிர்க்கட்சிகளின் ஒரே விருப்பு!

### சமன் ரத்னப்பிரிய தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணைக் கடன் கொடுப்பனவு நாட்டுக்குக் கிடைக்கக் கூடாது என்பதே தற்போதைய எதிர்க்கட்சிகளின் ஒரே ஆசை என்று ஜனாதிபதி தொழிற்சங்கத்தின் பணிப்பாளர் நாயகமும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாணய நிதியத்திடம் இருந்து இரண்டாவது தவணையான 700 மில்லியன் டொலர்களை பெற்றுக் கொள்ள அரசாங்கம் தற்போது செயற்பட்டு வருகிறது. அதற்கான மீளாய்வுக் கூட்டங்கள் செப்டெம்பர் மாதம் நடைபெற்றன.

பேச்சுக்களின் போது சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தின் விதிமுறைகளில் சில சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. எனினும், அடுத்த மூன்று வாரங்களுக்குள் பேச்சுகள் நிறைவடைந்து எஞ்சிய கடன் தவணைகள் பெற்றுக்கொள்ளப்படும் என நம்புகிறோம் என்று தெரிவித்துள்ளார்.

## சமகால விடயங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஹின்சனும் கலந்துகொண்டார்.

தற்போதைய இலங்கையின் பல்வேறு சமூக, பொருளாதார மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி இரு தரப்பினரும் இங்கு கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

தற்போதைய அரசின் பொருளாதாரக் கொள்கையால் மக்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் உள்ளிட்ட குழுவினருக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இதன்போது விளக்கமளித்தார்.

தற்போதைய அரசு மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறி திட்டமிட்ட திகதியில் நடத்தத் திட்டமிட்டிருந்த தேர்தலை ஒத்திவைத்தல், மக்களை அடக்கிக் கொண்டு வர முயற்சி செய்து வரும் பல்வேறு சட்டங்கள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் நாடாளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேராவும் கலந்துகொண்டார்.

## முல்லைத்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பொலிஸ் நிலையத்தில் நிர்வாகப் பிரிவில் சார்ஜன்டாகக் கடமை புரியும் பொலிஸ் உத்தியோகத்தரே முல்லைத்தீவு விளையாட்டு மைதானத்துக்குப் பின்பாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கெனப் புதிதாகக் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் கட்டட வளாகத்திலுள்ள குளியல் அறையில் தூக்கில் தாங்கிய நிலையில் நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அம்பாறையைச் சேர்ந்த இராமநாதன் சத்தியநாதன் எனும் 35 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தரின் மரணத்துக்கான காரணங்கள் இதுவரை கண்டறியப்படாத நிலையில் மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இரு வாரங்களுக்கு எதிர்ப்பு நடவடிக்கைகளில் யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் ஈடுபடும்

(பிரபாகரன் டிலக்சன்)

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜாவிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக, யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் தொடர்சியாக இரு வாரங்களுக்கு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளது.

யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு நேற்றைய தினம் ஒன்றுகூடி முக்கிய பல தீர்மானங்களை எடுத்துள்ளது. இதன்போதே முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா தொடர்பிலும், நீதித்துறையின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தி சட்டவாட்சியை நிலைநாட்டவும் ஏதுவாக எதிர்வரும் இரு வாரங்களுக்கு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது என தீர்மானிக்கப்பட்டது.

சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழுவில் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-



- முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கத்தால் எடுக்கப்பட்ட பணிப்பகிஸ்கரிப்பில் நாளைய தினம் இணைவதுடன் யாழ் சட்டத்தரணிகள் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் முல்லைத்தீவு சென்று நீதிமன்றத்தின் முன்னால் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வது.
- நீதித் துறைக்கு ஏற்பட்ட இந்த அச்சுதலை கண்டித்து அடுத்து வரும் இரண்டு வாரங்கள் கறுப்பு நிறத்திலான முக்கவசங்களை அணிந்து கடமையில் ஈடுபடுவது.
- நீதிபதிக்கு எதிரான அச்சுறுத்தல்களைக் கண்டித்து தமிழ் கட்சிகளினால் மருதனார்மடம் முதல் யாழ்ப்பாணம் வரை 4ஆம் திகதி நடத்த இருக்கும் மனிதச் சங்கிலி போராட்டத்திற்கு ஆதரவை தருவதுடன் அதில் அனைத்து சட்டத்தரணிகளும் பங்கு கொள்வது.
- நாளையும் நாளை மறுதினமும் சட்டத்தரணிகள் வடமாகாண நீதிமன்ற நடவடிக்கைகளை பகிஷ்கரிப்பதுடன் இது தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய மேலதிக நடவடிக்கை தொடர்பான விசேட பொதுக்கூட்டத்தை எதிர்வரும் 4ஆம் திகதி நடத்துவது.
- நீதிபதிக்கு ஏற்பட்ட அச்சுறுத்த தொடர்பில் பாரபட்சமற்ற சுயாதீன விசாரணை செய்யப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் நீதித்துறை சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

– என்பன போன்ற முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

# நீதித்துறையை மேலாதிக்கச் சிந்தனைக்குள் புகுத்த முனைந்தால் நெருக்கடிகளே ஏற்படும்

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் எச்சரிக்கின்றார்

(மன்னார் நிருபர்)

சர்வதேச உதவிகளை நம்பியுள்ள நாட்டின் எதிர்காலத்துக்கு நீதித்துறைக்கு ஏற்படுத்தப்படும் அழுத்தங்களால், பாரிய நெருக்கடிகள் ஏற்படலாமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் கவலை தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவின் இராஜினாமா குறித்து தாம் நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

"மேலாதிக்கச் சிந்தனையில் சில அரசியல்வாதிகள் இன்னும் செயற்படுவதையே நீதிமன்றங்கள் மற்றும் நீதிபதிகள் மீதான அழுத்தங்கள் புலப்படுத்துகின்றன.

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் ஏற்பட்டுள்ள இழுபறிகள், வங்குரோத்துக்குச் சென்றுள்ள நிதி நிலைமைகளால் நாட்டின் மீது சர்வதேசத்தின் கவனம் குவிந்துள்ள சூழல் இது. இவ்வாறுள்ள நிலையில், பொறுப்



புக்கூறல் மற்றும் கடன் நிபந்தனைகளை நிறைவேற்றுவதிலும் சர்வதேசம் திருப்தியில் இல்லை. பல்வகையான பொறிக்குள் நாடுள்ளபோது அரசியல்வாதிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். சிறுபான்மை சமூகங்களின் அபிலாஷைகளுக்கு எதிரான செயற்பாடுகளை நிறுத்துவதனூடாகவே சர்வதேசத்தின் அபிமானத்தை வெல்ல முடியும்.

ஆணைக்குழுக்களை நிறுவுதல், அரசியலமைப்பில் திருத்தம் செய்தல் என்பவை கண்துடைப்புக்காகவா செய்யப்படுகின்றன என்ற சந்தேகங்களைக் கிளறும் வகையிலே சிலரின் செயற்பாடுகள் உள்ளன. நாடாளுமன்ற நிலையியற் கட்டளையையும் மீறி நாடாளுமன்ற உறுப்பினர் சிலர் தெரிவித்த கருத்துக்கள், நீதித்துறையை பாரபட்சத்துக்குள் புகுத்துவதற்கான முயற்சியா எனக் கேட்க விரும்புகின்றேன்.

அதிகா. வர்க்கத்துக்குள் அல்லது பெரும்பான்மை விருப்புக்குள் நீதிமன்றங்களையோ அல்லது அரச நிர்வாகத்தையோ கொண்டுவர முயல்வது ஆரோக்கியமாக அமையாது. முல்லைத்தீவு நீதிபதிக்கு நடந்த கதிபோன்று எவருக்கும் நடைபெறக்கூடாது. அரசாங்கம் இதற்கு உத்தரவாதம் வழங்க வேண்டும்.

நிதி மற்றும் நீதித்துறைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு தீர்வு காண சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவது அவசியம். இல்லாவிடின் பாரிய நெருக்குதல்களுக்கு நாடு உள்ளாவதை தவிர்க்க முடியாது போகும்" –,என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



# அம்புலன்ஸில் 'ஐஸ்' கடத்தல் மடக்கியது முருங்கன் பொலிஸ்



ஒருவர் சிக்கினார் சாரதி தப்பி ஓட்டம்

மன்னார் முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளக்கமம் பகுதியில் அம்புலன்ஸில் ஐஸ் போதைப்பொருள் கடத்தப்பட்ட சம்பவத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பிரதான சந்தேக நபரான அம்புலன்ஸ் சாரதி தப்பியோடியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவனருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் சுற்றிவளைப்பு ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, முருங்கன் ஆதார வைத்தியசாலையில் பணியாற்றும் வங்காலையைச் சேர்ந்த சாரதி ஒருவரும், வவுனியா வைத்தியசாலையில் பணியாற்றும் ஊழியரும் 179 கிராம் எடை கொண்ட ஐஸ் போதைப் பொருளுடன் சனிக்கிழமை இரவு முருங்கன் பாடசாலைக்கு பின்புற மைதானத்திற்கு அம்புலன்ஸில் வருகை தந்த நிலையில் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், குறித்த இரு நபர்களும் பொலிஸ் அதிகாரியைக் கடித்துத் தாக்கிய நிலையில், பிரதான சந்தேக நபரான அம்புலன்ஸ் சாரதி தப்பி ஓடியுள்ளார். மற்றைய நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்தோடு, அம்புலன்ஸ் மற்றும் ஐஸ் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதான சந்தேக நபர் மேலதிக விசாரணையின் பின்னர் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

சம்பந்தப்பட்ட அம்புலன்ஸ் சாரதியான பிரதான சந்தேக நபர் முன்னர் பல்வேறு கடத்தல் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளார் எனவும், அம்புலன்ஸ பல தடவைகள் கடத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கலாம் என்ற சந்தேகம் நிலவுகின்றது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி இரு சந்தேக நபர்களின் தாக்குதலில் காயமடைந்த பொலிஸ் அதிகாரி மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரச அம்புலன்ஸில் போதை பொருள் கடத்தப்பட்டமை பல்வேறு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.





# சீரற்ற காலநிலையின் காரணமாக வைரஸ் காய்ச்சல் பாதிப்பு வரலாம்

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக வைரஸ் காய்ச்சல் கணிசமானளவு அதிகரிக்கலாம் என சுகாதார துறையினர் எச்சரித்துள்ளனர்.

தற்போதுள்ள நிலைமைகளை அவதானிக்கும் போது, சிறுவர்களுக்கு வயிற்றுப்போக்கு மற்றும் காய்ச்சல் போன்ற நிலைமைகள் அதிகளவில் ஏற்படக்கூடும் என கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

சாதாரணமாக கடும் மழையுடன் கூடிய வானிலை மற்றும் வெள்ளப் பெருக்கு போன்றவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் குழந்தைகள் மற்றும் நலிவடைந்தோர் மத்தியில் விரைவில் பரவ கூடிய வைரஸ் காய்ச்சல் அதிகரிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# மரத்தில் ஏறி அதை வெட்டியவர் தவறி விழுந்து அங்கேயே சாவு



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் மரம் ஒன்றை வெட்டுவதற்காக மரத்தில் ஏறி மரக்கிளைகளை வெட்டிக் கொண்டிருந்த ஒருவர் மரத்தில் இருந்து தவறி நிலத்தில் வீழ்ந்து உயிரிழந்த சம்பவம் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளதாக பொலிசார் தெரிவித்தனா.

மாவடிமுன்மாரி 40 ஆம் கொலனியைச் சேர்ந்த 35 வயதுடைய தர்மலிங்கம் லக்ஸ்மன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மாவடி முன்மாரிபகுதியில் உள்ள மரம் ஒன்றை வெட்டுவதற்காக நேற்றுக் காலை 10 மணிக்கு மரத்தில் ஏறி மரக்கிளைகளை வெட்டிக் கொண்டிருந்தபோது மரத்தில் இருந்து தவறி வீழ்ததையடுத்து சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார் என்பது பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து நீதிமன்ற உத்தரவை பெற்று சடலத்தை பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்புப் போதனாவைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுவருவதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# முல்லை. நீதிபதியின் இராஜினாமா: முறையான விசாரணை நடத்துங்கள்!

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் பிரதம நீதியரசரிடம் வலியுறுத்தல்



முல்லைத்தீவு நீதிவான் மற்றும் மாவட்ட நீதிபதியின் இராஜினாமா தொடர்பில் முறையான விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், பிரதம நீதியரசரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

முல்லைத்தீவு நீதிவான் மற்றும் மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா கடந்த 29 ஆம் திகதி தனது பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

அண்மைக் காலத்தில் அதிகளவில் பேசப்பட்ட சில வழக்குகள் நீதிவான் ரி.சரவணராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

குருந்தூர்மலை விவகாரத்துடன் தொடர்புடைய வழக்கு, கொக்குத் தொடுவாய் பகுதியில் மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டமை தொடர்பிலான ஆரம்பகட்ட விசாரணைகள் நீதிவான் ரி.சரவணராஜா முன்னிலையில் இடம பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.



# ரூ.7 கோடி நகைகள் வங்கியில் அபேஸ்

# பொலிஸாரின் விசாரணைகள் ஆரம்பம்!

வென்னப்புவ – அங்கம்பிட்டிய பகுதியிலுள்ள அரச வங்கியொன்றின் பிராந்தியக் கிளையில் கடந்த 28 ஆம் திகதி தங்க நகைகள் அபேஸ் பண்ணப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சுமார் 7 கோடி ரூபா பெறுமதியுடைய தங்க நகைகள் இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீண்ட வார விடுமுறையை இலக்கு வைத்து இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இரவு வேளையில் வங்கிக்குள் நுழைந்த குழுவினரால் பாதுகாப்புப் பெட்டகம் உடைக்கப்பட்டு தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த செப்டெம்பர் 27ஆம் திகதி பிற்பகல் 1.45 மணியளவில் வங்கி மூடப்பட்டிருந்த நிலையில், மீண்டும் செப்டெம்பர் 30ஆம் திகதி காலை 8.30 மணியளவில் வங்கி திறக்கப்பட்ட போது அது உடைக்கப்பட்டிருந்தமை தெரியவந்ததாக அதன் முகாமையாளர் வென்னப்புவ பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். .

கிரைண்டர் இயந்திரம் மூலம் பெட்டகமும் வெட்டப்பட்டது. தரையில் தேய்ந்து போன எட்டு பிளேடுகளை பொலிஸார் கண்டுபிடித்தனர். திருடன் அல்லது திருடர்கள் பெரும்பாலும் ரிச்சார்ஜபிள் பட்டரிகள் கொண்ட கிரைண்டரைப் பயன்படுத்தியிருக்கலாம் எனப் பொலிஸார் நம்புகின்றனர்.

கடந்த ஆண்டு முதல், நாடு முழுவதும் உள்ள பல தபால் நிலையங்கள் உடைக்கப்பட்டு, பணம் மற்றும் முத்திரைகள் திருடப்பட்டுள்ளன.

இந்தக் கிராமப்புற வங்கியில் உள்ள பாதுகாப்புப் பெட்டகத்தில் 26 அறைகள் உள்ளன எனவும், அவற்றில் ஏழு அறைகள் உடைக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

திருடர்கள் தப்பிச் செல்லும் போது வங்கியின் பாதுகாப்பு கமரா அமைப்பின் டேட்டா பதிவுகளையும் எடுத்துச் சென்று விட்டனர் எனவும் பொலிஸார் கூறுகின்றனர்.

# உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு

# கிழக்கில் கிரிக்கெட் சுற்றுப்போட்டி



- அபு அலா -

உலக சிறுவர் தினத்தையொட்டி கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக் களத்தின் ஏற்பாட்டில் சிறுவர்களுக் கான மென்பந்து கிரிகெட் சுற்றுப் போட்டி நேற்றுமுன்தினம் (01) திரு கோணமலை மக்கெய்சர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் என்.எம்.நௌபிஸ் தலைமையில் இடம்பெற்ற இப்போட்டியில், கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு திணைக்கள மாகாண ஆணையாளர் திருமதி ஆர்.றிஸ்வானி பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்தின் தலைவர் பி.மதன வாசகன் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இந்தக் கிரிகெட் சுற்றுப்போட்டியில், கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு திணைக்களத்தின் கீழ் இயங்கும் திருகோணமலை, மட்டக் களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட சிறுவர் பராமரிப்பு நிலையங்களின் சிறுவர்கள் பங்குபற்றினர்.

ஆண்கள், பெண்கள் பிரிவுகளில் தலா 3 அணிகள் பங்கேற்றன.

அணிக்கு 11 பேர் கொண்ட இச்சுற் றுப்போட்டி, 6 ஓவர்கள் மட்டுப்படுத்தப் பட்டதாக அமைந்தது.

இதில் திருகோணமலை மாவட்ட ஆண்கள் அணி வெற்றிபெற்றது. பெண்கள் அணியில் மூன்று மாவட்ட அணிகளும் கூட்டு வெற்றியாளர்களா கத் தெரிவு செய்யப்பட்டன.

இதில் வெற்றிபெற்ற பெண்கள் அணியினருக்கான கூட்டுக் கிண் ணத்தை கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு திணைக் கள மாகாண ஆணையாளர் திருமதி ஆர்.றிஸ்வானிவழங்கினார்,ஆண்களுக் கான சம்பியன் கிண்ணத்தை கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள மாகாணப்பணிப்பாளர்என்.எம்.நௌபீஸ் வழங்கினார்.













# இந்தியாவுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியது மாலைதீவு ஜனாதிபதித் தேர்தல் முடிவு!



மாலைதீவில் கடந்தவார இறுதியில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் முடிவுகள் இந்தியாவுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளன என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மாலைதீவில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் சீன ஆதரவு கொண்ட முகமது முய்சு வெற்றி பெற்றுள்ளமை இந்தியாவுக்கு பாதகமாக வந்துள்ளது.

மாலைதீவு ஜனாதிபதி தேர்தலில் முகமது முய்சு வெற்றிபெற்றமை நிச்சயமாகவே சீனாவை மகிழ்சிப்படுத்தியிருக்கும்.

ஏனெனில் இந்தியாவை நாட்டைவிட்டு வெளியேற்றுவோம் என்ற பரப்புரைகளை முன்வைத்த முகமது முய்சு 54 சதவிகித வாக்குகளுடன் இந்த தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார்.

இந்த தேர்தலில் தோல்வியடைந்த இப்ராஹிம் முகமது சோலியின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவுடனான மாலைதீவின் உறவுகள் வலுப்பெற்ற நிலையில் இனி காட்சிகள் மாறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு முதல் ஆட்சியில் இருந்த இப்ராஹிம் முகமது சோலி தனது பதவிக்காலத்தில் இந்தியாவுக்கு முன்னுரிமை என்ற கொள்கையை நடைமுறைப்படுத்தியிருந்தார்.

அவரது ஆட்சிக்காலத்தில் மாலைதீவில் தனது இருப்பைத்தக்க வைத்த இந்தியா அதன் மூலம் இந்து சமுத்திரத்தில் தனது கண்காணிப்பையும் விரிவாக்கியிருந்தது. இதற்காக 75 இந்திய ராணுவ அதிகாரிகள் அங்கு தங்கவைக்கப்பட்டனர்.

இந்த நிலையில், தனது கடற்படையை வேகமாக விரிவுபடுத்தி வரும் சீனா, மாலைதீவில் தனது ஆதிக்கத்தை விரிவுபடுத்தும் முயற்சிகளை மேற்கொண்டு வரும் நிலையில் அதன் ஆதரவாளரான முகமது முய்சு வெற்றி பெற்றுள்ளார்.

பாகிஸ்தானின் குவாதர் துறைமுகத்தை போலவே மாலைதீவிலும் தனது கடற்படையை நிறுத்த சீனா முயல்கிறது. இந்த முயற்சியில் அதற்கு வெற்றி கிட்டினால் இந்தியப் பெருங்கடலில் அதற்கு இரண்டாவது தளம் கிட்டிவிடும் என்பதில் ஐயம் இல்லை.

இலங்கையை போல சீனாவிடம் இருந்து மாலைதீவு பெருமளவு கடனை பெற்றுள்ளது. தலைநகர் மாலேயை சர்வதேச விமான நிலையத்துடன் இணைக்கும் பாலம் சீன முதலீட்டில் கட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலில் தெற்காசியாவில் சீனாவில் ஆதிக்கம் தீவிரமாக அதிகரித்து வருவது இந்தியாவிற்கு பாரிய அச்சுறுத்தலாக அமையும் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# வீதி விபத்தில் சிக்கினார் பிரபல பாடகி!



தென்னிந்தியாவின் பிரபல பாடகி பாடகி சின்மயி வீதி விபத்தில் சிக்கியுள்ளார்.

தமிழ் மற்றும் தெலுங்கு சினிமாவில் முன்னணி பாடகியாகவும், பின்னணி குரல் கொடுப்பவராகவும் இருப்பவர் சின்மயி. பல புகழ்பெற்ற பாடல்களை பாடி யுள்ள இவருக்கு அதிகமான ரசிகர்கள் உள்ளனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் வீடு விபத்தில் சிக்கினேன் என சின்மயி தனது சமூக லைத்தள பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அதில், குழந்தைகளுடன் சின்மயி காரில் சென்றபோது குடிபோதையில் முச்சக்கரவண்டி சாரதி ஒருவர் வந்து மோதியுள்ளார் என குறிப்பிட்டுள்ளார். இதனை தொடர்ந்து முச்சக்கர வண்டி சாரதி தப்பித்தும் சென்றுள்ளார்.

இந்த விபத்தில் தனக்கோ அல்லது தன் உடன் இருந்தவர்களுக்கோ எந்த பாதிப்பும் இல்லை என்றும், தாங்கள் பத்திரமாக தப்பித்ததை நினைத்து மகிழ்ச்சியடைகிறோம் என்றும் சின்மயி தெரிவித்துள்ளார். மேலும், குடித்துவிட்டு வாகனம் ஓட்டாதீர்கள் என்றும் சின்மயி பதிவிட் டுள்ளார்.

# நைஜீரியா இறுதி ஊர்வலத்தின்போது துப்பாக்கி முனையில் 25 பேர் கடத்தல்!



நைஜீரியாவில் இறுதி ஊர்வலத்தின் போது துப்பாக்கி முனையில் 25 பேர் கடத்தப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நைஜீரியாவின் தென்மேற்கு மாகாணமான ஒட்டோவில் உயிரிழந்த நபர் ஒருவரின் இறுதிச்சடங்கு ஊர்வலம் நடைபெற்றது.

இதில் உயிரிழந்தவரின் உறவினர்கள், நண்பர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

அப்போது திடீரென பயங்கர ஆயுதங்களுடன் வந்த மர்ம நபர்கள் அவர்களை சுற்றி வளைத்துள்ளனர்.

இதனையடுத்து, துப்பாக்கி முனையில் சுமார் 25 பேரை அவர்கள் கடத்தி சென்றுள்ளனர் என கூறப்படுகிறது.

ஆனால் கடத்தி சென்றவர்கள் யார்? எதற்காக கடத்தினார்கள்? என்பது இன்னும் தெரியவில்லை.

எனவே பொலிஸார் வழக்கு பதிவு செய்து, அவர்களை மீட்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

# உக்ரைனின் தொடரும் ஆளில்லா விமான தாக்குதல்!



உக்ரைனிய ஆளில்லா விமானங்கள் சோச்சியில் உள்ள ஹெலிகாப்டர் தளம் மற்றும் ஸ்மோலென்ஸ்கில் உள்ள விமான தொழிற்சாலையை தாக்கியுள்ளது என சர்வதேச ஊடகங்கள் தகவல்கள் வெளியிட்டுள்ளன.

ரஷ்ய சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட காணொளிகளில் சோச்சியின் அட்லர் விமான தளத்திற்கு அருகே புகை மற்றும் வெடிப்பு காட்சிகள் வெளியாகியுள்ளன.

ஆனால் இந்த காணொளியில் தாக்குதலால் ஏற்பட்டுள்ள சேதத்தின் அளவு என்ன என்பது தெளிவாகத் தெரியவில்லை.

இந்த தாக்குதலின் பின்னணியில் உக்ரைனின் இராணுவ உளவுத்துறை உள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்கு இலக்கான ஸ்மோலென்ஸ்கில் உள்ள விமானத் தொழிற்சாலை அரசு நடத்தும் தந்திரோபாய ஏவுகணை ஆயுதக் கழகத்தின் ஒரு பகுதியாகும் என கூறப்பட்டுள்ளது.

# படகு மீது திமிங்கலம் மோதியதில் ஒருவர் பலி



அவுஸ்ரேலியாவில் படகு மீது திமிங்கலம் மோதியதில் படகில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சிட்னிக்கு தென்கிழக்கே 14 கிலோமீட்டர் தொலைவில் உள்ள லா பெரௌஸில் உள்ள கடல் பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது படகில் பயணித்த இரண்டு பேரில், ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். மற்றுமொருவர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் லா பெரௌஸ் கடற் பகுதியில் அதிகளவில் திமிங்கலங்கள் இருக்கின்றன எனவும் அவை கடலுக்கு வரும் படகுகளை தாக்குவதை வழக்கமாகக் கொண்டுள்ளன என்றும் சிட்னியின் கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 03.10.2023



## மேஷம்

பயண அலைச்சல்களும் அதன் காரணமாக சோர்வும் காணப்படும். உங்கள் முயற்சியில் நல்ல பலன்களைப் பெறுவதற்கு உங்களை அமைதியாக வைத்திருக்க முயலுங்கள்.

மிகுந்த முயற்சிகளை எடுத்து நிறைய வேலைகள் செய்த பொழுதும் உங்கள் மேலதிகாரிகளிடமிருந்து உங்களுக்கு பாராட்டுகள் கிடைக்காது.

உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த வேண்டும். உங்கள் துணையிடம் சாந்தமான அணுகுமுறை வேண்டும். உங்கள் பதட்டமான மனநிலையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவது நல்ல புரிந்துணர்வுக்கு அனுகூலமாக அமையாது.

பணம் நிறைய கிடைக்காது. ஆனால் கடனுக்கு விண்ணப்பித்தால் உங்கள் கடனுக்கான ஒப்பளிப்பு கிடைக்கும்.



## ரிஷபம்

இன்றைய நாள் ஆக்கமுடைய நாளாக அமையும். சிறிய தொலைவிலான பயணமும் மற்றும் சில மாற்றங்களின் காரணமாக உங்கள் தைரியத்தையும் உறுதியையும் நீங்கள் இழக்க நேரலாம்.

குறித்த நேரத்திற்குள் கொடுக்கப்பட்ட பணியை முடிப்பது சற்று கடினமாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் மற்றும் உங்கள் துணையின் இடையே தொடர்பாடலில் இடைவெளி காணப்படும். இது உறவின் சீரமைப்பை கெடுக்கும். விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்வது நல்லது.

நிதிநிலைமை சீராகவோ நல்ல முறையிலோ காணப்படாது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வது இயலாது.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.



## மிதுனம்

சில நேர்மறையான மாற்றங்கள் உங்களை மகிழ்ச்சியான மனநிலையில் வைத்திருக்கும். உங்களிடம் காணப்படும் உறுதி உங்கள் வெற்றிக்கு வழிகாட்டும்.

உங்கள் பணிகளை திட்டமிட்டு ஒழுங்கமைத்துக்கொள்ள வேண்டும். பணிச்சுமை காரணமாக நீங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம்.

மிகுந்த பாதுகாப்பற்ற உணர்வின் காரணமாக உங்கள் துணையிடம் கடுமையாக நடந்துகொள்ள நேரலாம். உங்கள் துணையிடம் பக்குவமான அணுகுமுறையை கையாள வேண்டும்.

பணப் பற்றாக்குறையை சந்திப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றது.

தலைவலி அல்லது தொண்டை சம்பந்தமான வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.



## கடகம்

முக்கியமான முடிவுகள் எடுக்கும் போது சிறிது கவனமாக இருக்க வேண்டும். இல்லாவிடில் பிரச்சினைகளைச் சந்திக்க நேரும்.

நீங்கள் பணி நிமித்தமாக ஒரு சிறிய பயணம் ஒன்றை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

உங்கள் மனதில் காதல் வயப்பட்ட எண்ணங்கள் காணப்படும். உங்கள் துணையுடனான நடத்தையில் அது வெளிப்படும்.

நல்ல விசேஷங்களுக்காக பணம் செலவு செய்ய நேரிடும். உங்கள் உடன் பிறந்தோர் வீட்டு விசேஷங்க-ளில் பங்கேற்பீர்கள்.

இன்று மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இது உங்கள் ஆரோக்கியத்தை நன்கு பராமரிக்க உதவும்.



## சிம்மம்

இன்று உற்சாகமாக காணப்படுவீர்கள். அதனால் திருப்தி ஏற்படும். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைவீர்கள்.

உங்களின் திறமை காரணமாக பணிகளை செவ்வனே செய்து முடிப்பீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் மனதில் உணர்ச்சிகரமான உணர்வுகள் காணப்படும். உங்கள் துணையுடனான உறவை இது வலுப்படுத்தும்.

நிதிநிலைமை நன்றாக இருக்கும். உங்களால் வங்கியில் பணத்தை சேமித்து சேமிப்பை அதிகமாக்க முடியும். இது உங்களுக்கு திருப்தியளிக்கும்.

மகிழ்ச்சியின் காரணமாக இன்று ஆற்றலுடனும் துடிப்புடனும் காணப்படுவீர்கள்.



## கன்னி

நீங்கள் உங்கள் வருங்காலத்திலும் முன்னேற்றத்திலும் கவனம் செலுத்த வேண்டும்.

பணிகளைப் பொறுத்தவரை இன்று உங்களுக்கு சாதகமான நாளாக இருக்காது. பணிச்சுமை அதிகமாகக் காணப்படும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை தக்கவைத்துக் கொள்வதற்கான நோக்கமும் ஆற்றலும் குறைந்து காணப்படும். நட்பான அணுகுமுறையைக் கையாளவும்.

பணப்புழக்கம் உற்சாகமளிக்கும் வகையில் காணப்படாது. கூடுதல் செலவினங்கள் செய்ய நேரிடும்.

மனஅழுத்தத்தின் காரணமாக கால் வலி மற்றும் முதுகு விறைப்பு போன்ற உபாதைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இனிய பாடல்களைக் கேட்பதன் மூலம் உங்களை ஆசுவாசப்படுத்திக்கொள்ளுங்கள்.



## துலாம்

நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். நிகழ்வுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

பணிச்சுமை அதிகமாக இருந்தாலும் நீங்கள் அதை சரிகட்டி செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பகிர்ந்துகொள்ள அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சியை பராமரிக்க முடியும்.

பணஇழப்பிற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

தொண்டை எரிச்சலுக்கான சாத்தியம் காணப்படுகின்றது. குளுமையான உணவு உட்கொள்வதை தவிர்த்தல் நல்லது.



## விருச்சிகம்

அதிர்ஷ்டகரமாக இருப்பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

பணிகள் நலம் பயப்பதாக காணப்படும். சலுகைகளும் ஊக்கத்தொகையும் கிடைக்க வாய்ப்பு உள்ளது. அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

நீங்கள் உணர்ச்சிப் பூர்வமாக நடந்து கொள்வீர்கள். இது உங்கள் துணையை மகிழ்விக்கும்.

உங்களிடம் போதிய அளவு பணம் காணப்படும். பயனுள்ள வகையிலும் நல்ல செயலுக்காகவும் பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியம் சிறந்த முறையில் காணப்படுகின்றது. நீங்கள் சுறுசுறுப்பாகவும் தைரியமாகவும் உணர்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 03.10.2023




உங்கள் பொறுமை சோதிக்கப்படும். என்றாலும் மேற்கொண்டு திட்டமிடுவதற்கு அது உங்களுக்கு நன்மை தருவதாக அமையும். பிரார்த்தனையில் ஈடுபடுவது மற்றும் மந்திரங்களை கேட்பது மன அமைதியை ஏற்படுத்தும்.

சிறப்புடன் பணியாற்றுவீர்கள். பதவி உயர்வு வடிவத்தில் பாராட்டுகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

உங்கள் புரிந்துணர்வின் மூலம் உங்கள் துணையுடன் மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்களின் அர்ப்பணிப்பான பணி காரணமாக உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். அத்தகைய உற்சாகம் உஙகளுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று முழு ஆரோக்கியத்துடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள்.




இன்று அனுகூலமான நாள். இன்று வெளிப்படையாக இருப்பீர்கள். உங்கள் செயல்களில் உறுதியுடனும் நேர்மறையாகவும் இருங்கள்.

உங்கள் பணியை முறையான அணுகுமுறையுடன் கையாள வேண்டும் நேர்மறையான பலன்களைப் பெறுவதற்கு இது மிகவும் அவசியம்.

குடும்பப் பிரச்சினை ஒன்றின் காரணமாய் உங்கள் துணையுடன் மோதல் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். நட்பான அணுகுமுறை நன்மை தரும்.

தேவையற்ற செலவினங்களை சந்திக்கும் கட்டாயம் உண்டாகும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

நடப்பவைகளை லேசாக எடுத்துக்கொள்வது நல்லது. அதிகமாக யோசிப்பதையும் மிகுந்த உணர்ச்சிவசப்படுதலையும் தவிர்க்க வேண்டும்.




இன்று துடிப்புடன் காணப்படுவீர்கள். உங்கள் வளர்ச்சியைக் கண்டு மகிழ்வீர்கள். இன்று பயனுள்ள முடிவுகளை நீங்கள் எடுக்க முடியும்.

நீங்கள் உங்கள் பணியில் சவால்களை எதிர்கொள்வதற்கு தயாராக இருக்க வேண்டும். உங்கள் பங்கை நிறைவேற்றுவதற்கு உன்னதமான திட்டமிடல் வேண்டும்.

உங்கள் துணையுடன் நுண்ணுணர்வோடு காணப்படுவீர்கள். உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பராமரிக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

பணவரவிற்கான சாத்தியம் இல்லை. உங்கள் நிதிநிலையை நன்றாக பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

செரிமானக் கோளாறுகள் ஏற்படலாம்.




இன்றைய நாள் முற்போக்கான நாளாக அமைய நீங்கள் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும். கவலையை விட்டொழித்து நம்பிக்கையுடன் இருங்கள்.

நீங்கள் செய்கின்ற பணியில் நல்ல பலன்களைக் காணலாம். நீங்கள் உங்கள் சகபணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்களின் நட்பான அணுகுமுறை மூலம் உங்களின் துணையை மகிழ்விப்பீர்கள். இது அவருடனான புரிந்துணர்வை அதிகரிக்கும்.

உங்களிடமுள்ள பணத்தைக் கொண்டு நலமாக இருப்பீர்கள். நீண்ட நாள் நிலுவையில் உள்ள பணம் கைக்கு கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். உங்களிடம் ஆற்றல் மிகுந்து காணப்படும்.


OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence



S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRAL PARK JA-ELA
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotiline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539



Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park